# தம்பன் மாரியம்மன் ஆலயம்

(என வழங்கிய -- வழங்கும்)

# தில்லை காளி அம்மன் கோவில்



# கும்பாபிஷேக மலர்

நவாலி மானிப்பாய்



பிரம்ம சாமுண்டீஸ்வரி

*இற்றைக்கு (2000) சுமார் 250 ஆண்டுகட்கு முன் மாரியம்மன் ஆலயம் என்ற பெயரில் எமது ஊரில் வழிபாட்டுத் தலமாக ஸ்தாபிக்கப்பட்ட கோவிலின் முன்வரலாறு பற்றிய செவி வழிச் செய்தி..................*

சிவபூமி என்று சிறப்புப் பெற்ற யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த ஆவரங்கால் என்னும் புண்ணிய பூமியில் இருந்து தென்னிந்தியத் திருத்தலங்களைத் தரிசிப்பதற்குச் சென்ற ஆதி சைவப் பெரியார் ஒருவர் காஞ்சிப் பதியை அடைந்த சமயம், காஞ்சிப் பெரியாரால் ஓர் சக்தி யந்திரம் வழங்கப்பட்டு ஆவரங்காலில் கொண்டு சென்று வைத்து வழிபாடு செய்யும்படி ஆணையிடப்பட்டது. அதன்படி ஊரை அடைந்து ஓர் ஆலயம் அமைத்து வழிபாடுகள் நடத்தப்பட்டது. விசேட பூசைகள் நடைபெற்று, பூசையின் பலனை ஒப்படைக்கும் சமயம் அம்பாள் ஓர் சிறு பெண்குழந்தை வடிவில் காட்சி கொடுத்து பூசையில் ஏற்பட்ட குற்றம் குறைகளையும் அதற்கு ஏற்ற நிவர்த்தி முறைகளையும் நாட்டு நடப்புக்களையும் கூறும் அற்புத மூர்த்திகரம் கொண்டதாக அந்த யந்திரம் விளங்கியது. இதை நோக்கிய ஆலய ஸ்தாபகரும் ஏனையோரும் தம்முள் கலந்து கண்ட முடிவு பின்வருமாறு,

இவ்வளவு அற்புத மூர்த்திகரம் கொண்ட யந்திரம் எதிர்வரும் காலங்களில் வழிபாட்டிற்கு உரியதாக அமையுமாயின், கடவுள் நிந்தனையும் பக்குவமற்ற நிலையும் மிகுதியாகஉள்ள எதிர்கால சந்ததி துன்பமடைய நேரிடும். எனவே இதன் மூர்த்திகரம் குறையும் பொருட்டு பரிவார தேவதைகளை

வெவ்வேறு இடங்களில் ஸ்தாபிக்க வேண்டும் என்பதாகும். இந்த முடிவின்படி பிரதான அதி தேவதையை *"மாரியம்மன்"* என்ற பெயருடன் எமது ஊரின் தென் பகுதியிலும் இதற்குக் காவலாகத் தென்கிழக்கில் கல்லுண்டாயில் நரசிங்க வயிரவரையும் வடமேற்கே சங்கரத்தையில் பத்திரகாளி சமேத வீரபத்திரனையும் வடக்கே இடிகுண்டிற்கு மேற்காக ஆதிஞான வைரவரும் ஆதி சைவர்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்டு வருடாவருடம் விசேட உற்சவங்கள் மட்டும் நடத்தப் பெற்று வந்தன. நவாலியில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட மாரியம்மன் யந்திரம் ஓர் மூடிய பெட்டியில் வைக்கப்பட்டது.

அதன் உற்சவம், பலி பூசை என்பன தற்போது நாகநாதி குழந்தைவேல் என்னும் ஆசிரியருக்குச் சொந்தமான திடலில் நடைபெறும். ஏனைய காலங்களில் பத்தினித் தெய்வமாம் கண்ணகை ஆலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது.

சுமார் 100 -- 110 வருடங்கட்கு முன்னதாக உயர் வேளாளன் குடியைச் சேர்ந்த திரு. சுவாமிநாதன் தலைமையில் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஓலைக் கொட்டிலிலும் பின்னர் அவரது மகன் நாகேந்திரம் (தந்தை மகன்) இருவரும் முயன்று சுண்ணாம்புக்கட்டிடமாகவும் அமைக்கப்பட்டு உற்சவம் மட்டும் ஆவரங்கால் சைவர்களால் நடத்தப்பட்டு வந்தது.

பின் நாகலிங்கம், செல்லப்பா, விஸ்வநாதர், முருகேசு, தம்பு சுப்பிரமணியம் என்போர் பொறுப்பில் உற்சவம் நடத்தப்பட்டது. இந்தக் கால கட்டங்களில் நடைபெற்ற அற்புத நிகழ்வுகள்,

1. **கொடிமரம் நிறுவ முன் பலி கொடுக்கப்பட வேண்டிய சேவல் கொடிமரத்தில் வந்து இரவில் அமர்தல்.**

**- சாட்சி:- திரு. நாகேந்திரம் (ஓவசியர்)**

2. சக்தி பூசையின் போது வீசப்படும் உதிரம் கலந்த சோறு மறைதல். இது பற்றி பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் யாழ் பல்பலைக்கழக விரிவுரைகளில் கூறியுள்ளார்.

சாட்சி:- செல்வன் செல்வராசா ரமேஸ் (B.A, J. P சமூக சேவையாளர்)

3. உற்சவ பூசையின் போது மூலஸ்தானத்திற்கும் கொடிமரத்திற்கும் இடையே சென்றோர் எட்டாம் மடையின் முன் மரணமாவது.
அவ்வாறு உறவினரைப் பறிகொடுத்த பலர் இன்னும் உளர்.

4. வாந்திபேதி நோயை அகற்ற வேண்டி நடைபெற்ற பூசையின் போது தலை துண்டிக்கப்பட்டுப் பலியான ஆட்டுக்கடா தீபம் காட்டியதும் உயிர்த்தெழுந்து சென்று கடலில் மறைந்தது.

மேற்கண்ட அனைத்து அற்புதங்களையும் நேரில் கண்ட புண்ணிய சீலர் இன்னும் எங்களுடன் கூட இருந்து தேவையான நிகழ்வு விளக்கங்களை, தகவல்களைக் கூறித் தெளிவு தரும் பெரியார் தம்பிமுத்து கந்தையா ஆவார்.

5. முதற் பலியாகும் ஆட்டுக்கடா தானாக வந்து மது அருந்துதல்.

மேற்படி அற்புதங்களில் சேவல் வந்து கொடி மரத்தில் அமர்வது தவிர்ந்த ஏனையவை சுமார் 70 வருடங்கட்கு முன்னர் நடைபெற்றவை. சேவல் வந்து அமர்ந்த நிகழ்வு கூட சுமார் 45 வருடங்கடகு முன்னர் நடந்த கதையாகிறது..

காரணம் ஆலய நிர்வாகிகட்கும் சைவர்கட்கும் ஏற்பட்ட தகராறுகள். இதன் பின் சைவர்கள் வருவதைக் கைவிட்டனர்.
பத்ததி மறை பொருளானது.

பின்னர் திரு. தம்பு சின்னப்பா, திரு. தம்பு சின்னத்துரை சகோதரர்களால் பல இடையூறுகளைத் தாண்டி கோண்டாவிலில் இருந்து சைவர்களை அழைப்பித்து உற்சவபூசை நடத்தப்பட்டது. அதைப் பின்பற்றி திரு. பொ. சிவகுரு, திரு. தம்பிமுத்து கந்தையார திரு. சின்னையா தியாகராசா, திரு. நவரத்தினம், திரு. செல்லையா என்போர் பொறுப்பில் ஒரு வருடம் நடைபெற்றது. மீண்டும் திரு. தம்பிமுத்து கந்தையா, திரு.பொ.சிவகுரு என்னும் இருவராலும் பொறுப்பேற்கப்பட்டது. இக்காலகட்டத்தில் ஆலயம் ஓர்வரிக்கல் வைத்து 5 இஞ்சி உயர்த்தப்பட்டது. முற் கொட்டகைக்கு ஓடு போடப்பட்டு வேப்பம் கதவும் போடப்பட்டது. பின் அரியபுத்திரன் மகன் குகன் கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு. செ. ஜெயராசா அவர்களால் உற்சவம் பொறுப்பாக நடாத்தப்பட்டது. பின். திரு. கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மீண்டும் திரு. தம்பிமுத்து கந்தையா, மணியம் இருவரும் பொறுப்பேற்று நடத்தினார்கள். உற்சவம் நடைபெற்று முடிந்த காலம் முதல் மறு உற்சவம் நடைபெறும் வரை ஆலயத் திறப்பு கண்ணகை அம்மன் கோவில் பூசகர் வசம் இருக்கும்.

ஆதியில் மாரியம்மன் ஆலயத்தில் நித்தியமாக விளக்கேற்ற வசதிப்படாத காரணத்தால் 100 - 110 வருடங்கட்கு முன்னரே ஆவரங்கால் சைவர்களால் வடக்கு நவாலியைச் சேர்ந்த திரு. கணேசு என்பவரது பாட்டன் காலத்தில் அவர்களது வீட்டில் ஓர் இடம் அமைத்து நித்திய விளக்கேற்றவும் விசேட மடை போடவும் ஏற்பாடானது. அந்த ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு மிக விமரிசையாக திரு. கணேசு சண்முகநாதன் அவர்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

1976 -- 1978 வரை இந்த ஆலயம் தொடர்பாக ஏற்பட்ட தகராறு, உரிமை பற்றி ஆராய்ந்த யாழ்ப்பாண மக்கள் நீதி மன்றிலும் பின் உயர் நீதி மன்றின் மூலமாகவும் கிடைக்கப்பெற்ற ஆணைப்படி இந்த ஆலயத்தைப் பராமரிக்கும் பணி எனது கடமையானது.

*1976ல் அப்போதைய மடப்பள்ளியின் சுற்றுப்புறச் சுவர் பூசப்பட்டது.*

*1977ல் முன் கொட்டகைக்குத் தேவையான காட்டு மரங்கள் வாங்கப்பட்டன.*

*1980 ல் முன் மண்டப அத்திவாரம், தூண்கள் கட்டப்பட்டன.*

*1980ல் அம்பாள் தரிசனத்தில் கூறியபடி வேள்விப் பூசை என்னைக் கருவியாக்கி நடைபெற்றது.*

*1976 -- 1980 வரை நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளிலும் கந்தையா பத்மநாதன், திரு. ந.சிவபாதசுந்தரம், தம்பிமுத்து கந்தையா, சி.சிவகுமார், சு. ஜெயமுரளி, சு. மோகனமுரளி, செ. கந்தசாமி, இ. கந்தசாமி என்போர் உற்ற துணையாகி உதவினர்.*

*1981ல் ஸ்ரீதரன் வெளிநாடு செல்லும் சமயம் சைவப் பூசகர் செந்தில் பூசகராக நியமிக்கப்பட்டார். பின் அம்மன் கூறியபடி கந்தசாமி பூசகரானார்.*

*1981 – 1987 வரை அவரது அனுசரணையுடன் நாதன் ஐயர், கற்பக ஐயர், சுசி ஐயர் என்போரால் உற்சவ பூசைகள் நடத்தப்பட்டன. கந்தசாமி அவர்களால் நவராத்திரி பூசைகள் திருவெம்பாவை என்பன உபயகாரர்களை ஏற்படுத்தி நடத்தப்பட்டது. பஜனை ஆரம்பிக்கப்பட்டது.*

*1988ல் மறுபடி சி.ஸ்ரீதரன் பூசகரானார். 1989ல் ஆலயம் வேதாகம விதிமுறைக்கேற்ப அமைக்கும் படியும் திரு உருவம் பிரதிஷ்டை செய்யும்படியும் திருவருள் கிட்டியது. மூல மூர்த்தியான அம்பாள் சொரூபம் பற்றிய சில சந்தேகங்களைத் தீர்க்கும் பொருட்டு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் அவர் மூலமாக பேராசான் கைலாசநாதக் குருக்களையும் நாடியும் ஆதாரத்துடன் கூடிய தீர்வு கிட்டாது பின் சிதம்பரத்தில் தில்லை அம்மன் கோவிலில் ஆதாரம் கிட்டியது.*

*1989ல ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டது. 1990ல் 70 ஆண்டுகட்கு முன் மறைவான பத்ததி சேதாரமடைந்த நிலையில் கைக்குக் கிட்டியது.*

*2000ல் அம்பாள் திருவருளோடு கூடிய மெய்யடியார்கள் பேராதரவுடன் மஹா கும்பாபிஷேகம் இனிது நடைபெற்றது.*

## *எனது உரை*

மெய்யடியார்களே!

1976 தொடக்கம் இன்று வரை ஆலய பரிபாலனம், அமைப்பு என ஆலயம் சம்பந்தப்பட்ட சகல பணிகளும் அம்பாள் தரிசனத்தில் கூறும் பணிப்புரைகளுக்கு ஏற்ப நடைபெற்று வருகின்றன.

யந்திரப் பிரதிஷ்டையாக மாரியம்மன் என்ற பெயரில் எதற்காக முன்னோர் ஆலயத்தை அழைத்தார்கள் என்பது எனது சிற்றறிவிற்கு எட்டாத விடயம். திருவுருவப் பிரதிஷ்டைக்கு அம்பாள் காட்டிய தோற்றம் காளியே என துர்க்கா துரந்தரி கூறியபோதும் வலது கையில் பிட்சாபாத்திரம் ஏந்திய மூர்த்தம் எது

என்பது பற்றி தில்லையில் அம்மன் தரிசனம் கிட்டும் வரை ஆதாரம் இல்லை. தரிசனம் கிட்டிய பின் நவாலி வந்த போது 70 வருடமாகக் காணாதிருந்த, 1976 முதல் நான் பலவாறு தேடியும் கிட்டாத ஏடு எனது வீட்டில் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அதில் மூர்த்திகரம் என்ன என்பதன் ஆதாரம் இருந்தது. தரிசனத்தில் கிட்டிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது தகாது என குருதேவர் கூறியுள்ளார். அத்தகைய அனுபவங்களை வாய்மொழி உணர்த்தா அனுபவம் உணர்த்தும் தில்லையில் கிட்டிய அம்மன் வரலாறு தொடர்கிறது...

பணிவுடன்
ஸ்ரீதரன்

## காளி வடிவம்:

சிவபெருமானுடைய அருளே வடிவமாக ஞானமே திருவுருவமாக விளங்கும் உலகன்னை ஆனந்தக் கூத்தனுக்கு அருகில் சிவகாமியாக எப்போதும் அவனது ஆடல் கண்டு இன்புற்றிருப்பதோடு, இத்தில்லையின் எல்லையிலே தில்லைக்காளியாகவும் பிரம்ம சாமுண்டீஸ்வரியாகவும் ஏன் தனிக்கோயில் கொண்டு நமக்கு அருள வேண்டும்? இவ்வினா எழுவது இயல்பு தானே! இறைவி காளியின் தோற்றத்தினை எப்போது கொண்டு அருள்கிறாள் என்று சற்றுக் காண்போம்.

“போக பவானி புருஷேஷு விஷ்ணு
க்ரோதேஷு காளி சமரேஷு துர்க்கா”

என்று மகாகவி காளிதாசர் கூறுவார். அம்பிகை

அருட்சக்தியாக விளங்கும் போது பவானியாகவும், புருஷ் சக்தியாக விளங்கும் போது திருமாலாகவும், கோபாசக்தியாக விளங்கும் போது காளியாகவும், போர்ச்சக்தியாக விளங்கும் போது துர்க்கையாகவும், திருக்கோலங் கொண்டருள்கிறாள்.

சப்தமாதர் வழிபாடு நம் நாட்டில் தொன்மையாக வருகின்ற ஒன்றாகும். சப்தமாதர்களில் ஒருவராகக் காளியைக் கூறுவர். நம் தமிழ்நாட்டில் மட்டுமன்றி இதர மாநிலங்களில் கூட ஊர்கள் தோறும் காவல் தெய்வங்கள் உள்ளன. அவ்வாறு அமைந்தவற்றுள் காளி - காளியம்மன் திருக்கோயில் இல்லாத ஊரே இல்லை எனலாம். வடக்கே கல்கத்தா காளி யாவரும் அறிந்த திருக்கோயிலாகும். காளியை பிடாரி எனவும் கூறுவர். பீடை (தீமை) அறுப்பவள் பிடாரி ஆனாள்.

கோபசக்தியாக விளங்குபவள் காளி - தீமைகளை அழிப்பவள் காளி- இறைவனை "ஆடல் கண்டருளிய அணங்கு" "சூருடைக் கானகம் உகந்த காளி" என்றெல்லாம் கருதப்படுவது எதனாலே? இங்கே குறிப்பிடப்பட வேண்டிய அவசியம் என்ன? காளி செய்யும் ஊன நாடகத்தினால் உலகில் அழிவு ஏற்படாது தடுக்க இறைவன் ஞான நாடகம் ஆடுகின்றான். இறைவன் பொன்னம்பலத்தில் ஆனந்தமாக ஆடுகின்றான். இறைவனது பரமானந்தத் தாண்டவம் நிகழாதாயின் இவ்வுலகில் போர்களும் குழப்பங்களும் மலிந்து மண்ணுயிர்கள் மடியும். கோர சக்தியின் தாண்டவம் மிகும் என்பதை,

" தேன்புக்க தண்பணை சூழ் தில்லைச் சிற்றம்பலத்துள்
தான்புக்கு நட்டம் பயிலுமதும் என்னேடி
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்கு வேற்காளிக்கு ஊட்டங்காண் சாழலோ"
( திருச்சாழல் 14 )

என்று திருவாசகம் பேசுகின்றது.

# தில்லைக் காளி வரலாறு:

தீயவைகளை அழிக்கும் கோபசக்தியாக தில்லை காளியும் நல்லவைகளை அருளும் சாந்த சொரூபியாக தில்லையம்மனும் ஆக இரு வடிவாக இருந்து அருளாட்சி செய்வது ஆண்டவனின் திருவிளையாடல்களில் ஒன்றுதானோ? உலக நன்மைக்கு இப்படியும் ஒரு ஊடல் அம்சமோ?

கைலங்கிரியில் எம் தந்தை ஈசனுக்கும் தாய் உமையவளான பார்வதி தேவிக்கும் உரையாடல் ஏற்பட்டு தொடர்ந்து ஊடலால் விவாதமே உருவாகிவிட்டது. சிவம் பெரிதா? சக்கி பெரிதா? இதுதான் விவாதம், ஆட்டி படைக்கும் நாயகன் ஈசன், சிவமே பெரிதெனக்கூற, அருளாட்சி படைக்கும் நாயகி பார்வதி, சக்திதான் பெரியது என உரைக்கின்றாள். "சிவன் இல்லையேல் சக்தி இல்லை" என்று ஈசன் மறுமொழி உரைக்க, "சக்கி இல்லையேல் சிவன் இல்லை" என்று பார்வதி எதிர்க்க இருவரிடையே மிக்க வாக்கு வாதம் ஏற்படுகின்றது.

சிவமும் சக்தியும் ஒன்றே, ஒன்றோடு ஒன்று உறவு இல்லையேல் உலகில் எந்த ஒரு இயக்கமும் இல்லை என்ற மெய்ஞானத்தை உணர்த்தவும், உலக நலன்களை கருத்தில் கொண்டும், பார்வதி தமது மமதையால் சக்தியே பெரிசு என்று கூறும் காழ்ப்புணர்வை உணர்த்த வேண்டியும், நாடகத்தை துவக்குகின்றனர். ஆம் ஈசன் எம் தாய் பார்வதியை காளியாய் சபித்து விடுகின்றார்.

தானே சக்தி தன்னை சபிக்க ஈசனுக்கு எப்படி சக்தி வந்தது என்று உணர்ந்தவள், உண்மையை அறிந்தாள். சிவமும் சக்தியும் ஒன்றே என்ற தத்துவத்தை தெரிந்து கொண்டவள் தம் கூற்றின் தவறை நினைத்து வருந்தி ஈசனிடம் சாபவிமோசனம் கேட்டறியலானாள். முக்காலமும் உணர்ந்த முக்கண்ணன் உலக ஷேம நலன்களை கருத்தில் கொண்டு உன்னை கோர வடிவான காளியாய் ஆக்கினோம்.

வரும் யுகங்களில் அரக்கர் குலத்தால் தேவர்கள் முனிவர்கள் மற்றும் உலகின் லட்சோபலட்ச உயிர்களுக்கு இம்சை ஏற்பட இருக்கிறது அரக்கர்களின் அழிவுக்கு கோபசக்தியே ஆயுதம்; நீ காளியாய் இருந்து அரக்கர் குலத்தை வேரோடு அழித்து தேவர்களுக்கு விமோசனம் அளித்து முடிவில் தில்லையிலே என்னை நோக்கி தவம் செய்வாய். முனிவர்கள் விருப்பத்திற்கு உகந்து நான் ஆனந்த நடனம் காட்சி தரும் காலத்தில் உன்னை சிவகாமியாக ஆட்கொள்கின்றேன் என்று உரைக்கின்றார்.

இவ்விதமாக காளியின் தோற்றம் கொண்ட உமை யவளான பார்வதி தேவி இறைவனின் அருளாணையின் வண்ணம் ஊர்மாறி உருமாறி காளியின் கோரத்தன்மை மாறமல் மகிஷாசுரன் பண்டகாசுரன் தாரஹாசுரன் போன்ற அரக்கர் குல அசுரர்களை சம்ஹாரம் செய்து தேவர்கள் முனிவர்கள் மற்றும் ஏனைய உலக ஜீவராசிகளுக்கு அபயமளித்தாள். தாரகனை அழித்தற் பொருட்டு தோன்றிய காளிதேவி அசுரனை அழித்த பின்பும் கோபம் தணியாமல் உலகத்தை அழிக்கத் தொடங்கவே பெருமான் ஊர்த்துவதாண்டவஞ் செய்து, காளியின் கோபத்தை அடக்கி தில்லையில் அமர்க என ஆணைதந்தனர். (சிதம்பரம் தருமையாதீனப் பதிப்பு பக் 14.1949 வரலாறு) சாந்தம் அடைந்த அம்பிகை காளியாகவே தில்லை வனத்தை அடைந்து தில்லை காளியாகி ஈசனிடம் ஐக்கியமடைய வேண்டிய தருணத்தை எதிர்பார்த்து தவமிருந்தாள். காளியின் அம்சம் முடிவுறும் வேளை வந்தமையாலும் சாப விமோசனம் பெற்று 'காளி' தன்மை நீங்க வேண்டியமையாலும் "காளி உரு இனி இல்லை காளி உருவுக்கு இதுவே எல்லை" என்றாகி "எல்லைக்காளி" என கருதப்படுகிறாள்.

எல்லைக்காளி தில்லையில் எழுந்தருளியமையால் தில்லைக்காளி எனவும் வணங்கப்படுகிறாள். தில்லைவனத்தில் சிவபெருமானின் ஆனந்த தாண்டவத்தை கண்குளிரக் கண்டு மகிழ, சுயம்பு லிங்கமாக எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ மூல நாதரை பூஜித்து வரும் வியாக்கிரபாதர் பதஞ்சலி முனிவர்களின் பூசனைக்கு குளிர்ந்த இறைவன் அவர்களுக்கு தம் திரு நடனம் காட்சி தருகின்றார். ஆண்டவன் ஆட அணுக்கள் ஆடுகின்றன. அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன.

கோபமே காளி என்றான தில்லைக்காளியின் தவத்தினை பொருட்படுத்தாமல் இறைவியை விட, ஈசனின் அடியார்களின் பூஜையே பெரிதாக கொண்டு காட்சி தரும் இறைவனின் செயல் காளிக்கு மேலும் கோபத்தை உண்டாக்க, கருணை வடிவான காளி கனலாகி தில்லை வனத்தில் வாழ்ந்த முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் தீங்கு செய்யத் தொடங்கினாள். அவளின் ஊழித்தாண்டவம் தொடர்ந்தால் உலகம் எக்கதிக்கு ஆளாகும் என்பது ஈசனுக்கு தெரிந்தது தானே! முனிவர்களின் தவக்கோலங்களை சிதைத்து யாகங்களை அழித்து ஆனந்த தாண்டவம் புரியும் ஈசனை அடைந்த காளிதேவி அவருடன் வாதிட்டு ஆடல் வல்லானை தன்னுடன் ஆடல் போட்டிக்கழைத்தாள். தில்லைச் சிற்றம்பலத்தில் நிரந்தரமாக தம் திருநடனக் காட்சியருள மூவாயிரம் முனிவர்கள் உடன் வந்த பெருமான் -- இம்முனிவர்களே இறைவனின் தீட்சை பெற்ற தீட்சதர்கள் ஆவார்கள் -- காளியின் ஆடல் போட்டிக்கு சம்மதித்து, போட்டி என்று ஆகிவிட்டால் நிபந்தனை ஒன்று வேண்டுமே என்று குதர்க்கம் பேசுகின்றார். ஆடற்கலை பெண்களுக்கே உரித்தான கலை. அதனை அபத்தமாக ஆடி அடியவர்களிடம் ஆடல் வல்லான் என ஆவது முறையல்ல. முறைப்படி என்னுடன் ஆடி வென்று நிரூபியுங்கள். இந்த போட்டியில் நான் தோற்றால்

தோல்வியின் அடையாளமாக இத்தில்லையின் எல்லைக்கு சென்று விடுகின்றேன் என்கிறாள் காளிதேவி. ஆடல் வல்லானும் காளிதேவியும் ஆடத்தொடங்கினர். அவர்கள் மட்டுமா ஆடினர்! அண்ட சராசரங்களும் ஆடின. இக்காட்சியை நினைவிற் கொண்டே செந்தமிழ் சந்த கவிராஜராகிய நம் அருணகிரிநாதர்

அதல சேடனார் ஆட அகிலமேரு மீதாட
அபின காளி தானாட அவளோடு, அன்று

அதிரவீசி வாதாடும் விடையிலேறுவார் ஆட
அருகு பூ த வேதாளம் அவைஆட

மதுரவாணி தானாட மலரில் வேதனார் ஆட
மருவு வானுளோர் ஆட மதியாட

அனச மாமியார் ஆட நெடிய மாமனார் ஆட
மயிலும் ஆட நீயாடி வரவேணும்

என்றார் தம் திருப்புகளிலும்

பிரம்மதேவன் ஜதி சொல்ல, மாகாவிஷ்ணு மத்தளம் அடிக்க, நந்திதேவர் தாளமிட, நாரதர் தம்புராமீட்ட, சரஸ்வதி வீணையில் சுதிசேர்க்க ஈசனும் காளியும் ஆடிக் கொண்டிருந்தனர். முனிவர்களாலும், தேவர்களாலும் வெற்றி தோல்வியை ஊர்ஜிதம் செய்ய இயலாத நிலையில் சிவதாண்டவம் நடனம் தொடர்ந்து நிகழ்ந்தது. நடன இறுதியில் பெருமான் தமது காதில் அணிந்திருந்த குண்டலத்தை கீழே விழுமாறு செய்தருளி; அக்குண்டலத்தை தமது காலினாலே எடுத்து தலைவரையில் காலைத்தூக்கி ஆடியபடியே காதிலும் அணிந்து கொண்டார் இத்தாண்டவம் ஊர்த்துவ தாண்டவம் எனப் போற்றப்பெறுவது காளிதேவி பெண்ணாதலின் ஈசனைப்போன்று ஊர்த்துவதாண்டவம் ஆடுவதற்கு நாணமுற்று தோற்றாள். போட்டிக்கு நிபந்தனை இட்டவள் இப்படித்தான் ஆடவேண்டும் என்று நியதியையும் விதித்திருக்கவேண்டுமோ?

கோபமே உருவானவள் காளி, ஈசன் தன்னை மதியாமல் அடியார்களை மதித்து காட்சி தந்தமைக்கு ஏற்பட்ட கோபம் தணியுமுன்னே தோற்றலினால் ஏற்பட்டகோபம் தீப்பிழம்பாக பெருக்கெடுத்து முகம் சிவந்து தில்லையின் எல்லையில் சென்று அமர்ந்தாள்

இதனை அறிந்த தேவர்களும், முனிவர்களும் ஐயம்கொண்டனர். சிவன் இல்லையேல் சக்திஇல்லை சக்தி இல்லையேல் சிவன் இல்லை. இவர்கள் இருவரும் இப்படி வேறு வேறு பிரிந்திருந்தால் இநத பிரபஞ்சம் எப்படி இயங்கும் இறைவனிடம் முறையிட்டனர்.

தேவர்களின் வேண்டுகோளின் பேரில் இறைவன் காளி தேவியிடம் சென்று; " காளீ அரக்கர்களின் அழிவுக்கே உன்னை உருவாக்கினேன் அரக்கர்களின் நாசம் அடங்கி விட்டது. நீ உன் சாபம் நீங்க பெற்று சிவகாமி என்னும் நாமதேயத்துடன் வருவாயாக" என்றார். "இறைவா அரக்கர்களின் நாசம் அடங்கி விட்டது ஆனால் அதலினும் கொடிய அகம்பாவம் ஆணவம், இன்னும் அழிய பெறவில்லையே" என்கிறாள். தேவி உன் கோபம் நியாயமானதே நீ இந்த எல்லையில் வந்து விட்டதால் உன் பெருமை குன்றாது. அது மட்டுமல்ல நான் தில்லையில் நிரந்தரமாக காட்சி தர எழுந்தருளும் சமயம் என்னை வணங்கும் பக்தர்கள் உன்னையும் வந்து தரிசிக்கின்ற போதுதான் பயனும் பக்தியும் முழுமை பெறும். அந்த வகையில் உன்னுள் நானே இருக்கின்றேனே அது உனக்கு பெருமை தரவில்லையா? என்கிறார்.

இறைவன் இவ்விதமாக கூறியும் காளிதேவி சினம் அடங்கவில்லை. விஷ்ணு சாந்தப்படுத்தினார். சிறிதும் குறையவில்லை. நான் முகன் பிரம்மன் காளியை நான்கு வேதங்களினின்றும் பலவாறு துதித்து சாந்தம் அடையுமாறு வேண்டினான். வேதத்திற்கு ஒருமுகமாக நான்கு முகம் கொண்டவளாய் சினம் நீங்கி பிரம்மசாமுண்டீஸ்வரியாக உருக்கொண்டு

பின் இறைவனுடன் சிவகாமியாக இணைந்து காளியின் சாபம் நீங்கப்பெற்றாள்.

தேவி..உன் சினம் அடங்கியது கண்டு உள்ளம் மகிழ்கின்றேன். கோபம் கொண்டவளாக தில்லைக்காளியும், சாந்தம் கொண்டவளாக பிரம்மசாமுண்டியும் எழுந்தருளச்செய்தது மானிடர்களின் விருப்பங்களேயாகும். தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அரக்கர்கள் எப்படி தொல்லை கொடுத்தார்களோ அதனைப் போன்று அகம்பாவம், ஆணவம், சினம், விரோதிகள், தீயவர்கள், கொடியவியாதிகள் அனைத்தும் அரக்கத்தனமாக மானிட ஜீவராசிகளை கொடுமைக்கு ஆளாக்கும் அதனை நீ கருணை வடிவான காளியாகவே இருந்து உன் சினம் அடங்காமல் நி ஸம்ஹரிப்பாயாக. சாந்தம் வடிவத் தன்மைக்குகந்தவாறு கல்வி செல்வம் வீரம் போன்ற சகல ஐஸ்வரியங்களையும் அருளிச் செய்வாயாக என்கிறார். தேவர்களும் முனிவர்களும் அகமும்,முகமும் மலர்ந்து மலர் சொரிந்து நின்றனர்.

## தில்லைக் காளியின் பெருமை:

கொடியோரை ஒறுத்து நல்லோரைக் காத்தற் பொருட்டு இறைவி கொண்ட கோரவடிவமே காளி வடிவமாகும். தில்லை நகரின் காவல் தெய்வமான தில்லைக்காளி எண்ணற்ற குடும்பங்களின் குலதெய்வமாகவே வணங்கப்பட்டு வருகிறாள். தீமைகளை தீய எண்ணங்களை பகைவர்களை அழிக்கவல்ல பேராண்மை பெற்று ஆற்றல் மிக்கு விளங்க எண்ணுவோர் காளி வழிபாட்டினால் அந்நிலையை அடைகின்றனர். வெற்றித் தெய்வமாக வெற்றிக்களிப்பு மேம்பட்டு தோன்ற காளி ஆடிய ஆட்டத்தினை நினைவு கூர்வதாக இன்றும் கிராமங்களில் காளியாட்டம் நிகழ்ந்து வருவதை நாம் காண முடிகின்றது. தில்லை நகரின் மக்களுக்கு மட்டுமல்ல மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரின்

துன்பங்களிலிருந்தும் துயரங்களிலிருந்தும் எல்லையிலிருந்து காத்து வருவதால் " தில்லைக்காளி எல்லைக்கப்பால்" என்னும் சொல் வழக்குவழங்கி வருகின்றது. உலகிற்கும் ஒளி வழங்கும் பகலவன் காலையில் உதயமாகும் போது இவள் முகம் பார்த்து தாம் வெம்மை அடைகின்றான். மாலையில் அஸ்த்தமிக்கும் போது இவள் முகம் பார்த்து தான் வெம்மை குறைகின்றான். புராணச்செய்தியின் படி இரணியனை வதைத்து பிரகலாதனை காக்க திருவுளம் கொண்ட திருமால் நரசிம்ம மூர்த்தியாக எழுந்தருளிஇரணிய வதம் செய்த பின்பும், தனது உக்கிரமான கர்வம் மிகுதியும் கொண்டு உலகை நலிவுறச் செய்தமை கண்ட சிவபெருமான் சாபமூர்த்தியாக திருவுருக் கொண்டதோடு தனது சக்தியை மிகுவிக்கத் தமது நெற்றிக்கண்ணிலிருந்து வடக்கில் அமர்ந்த காளி தேவியை துணைகொண்டு நரசிம்மத்தை அடக்கியருளினாளர்.ஆதலினால் "உத்தரப் பிரத்யங்கரா காளி" (வடபத்திரகாளி) என்ற பெயரும் ஏற்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது. தொன்று தெட்டு விளங்கி வரும் இத்தில்லை அம்பிகையை நான் முகன் முதலாக பல்வேறு தேவர்களும், முனிவர்களும், அரசர்களும், வீரர்களும் புலவர்களும், பாமரர்களும் நாளும் வழிபட்டு பேறு பெற்றுள்ளனர். ஒரு குறிப்பின்படி .சுவிஸார்வ பௌமனாக திகழ்ந்த மகாகவி காளிதாசர் தில்லைக் காளியை வழிபட்டு அவள் அருளால் தான் வடமொழி புலமை மிகுந்து விழங்கினார் என தெளிவாகிறது. அண்மையில் (11.2.87)சிம்பரம் நடறாஜ பெருமானின் குட முழுக்கின் போது தீட்சதர் பெரு மக்களால் அருள் தரும் தில்லைக் காளிக்கும் தில்லையம்மனுக்கும் அபிஷேகம் ஆராதனை செய்து முடித்தபின்னரேபெருமானின் குட முழுக்கு செய்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## தாயின் அருட்திறனிலிருந்து நாமறிந்த சில பகுதிகள்

*அடிக்கழுத்தி னொடும் சிரத்தை அரிவராலோ*
*அரிந்த சிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ*
*கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ*
*குறைவுடலும் கும்பிட்டு நிற்குமாலோ*

என:று பரணி பேசும். இவ்வழக்கத்தை யொட்டியே தில்லைக்காளியின் திருக் கோயிலில் எட்டு வீரர்கள் தமது தலைகளை தாமே வெட்டிக் கொண்டுதம்மை பலிகொடுக்கும் செய்தியை சித்தரிக்கும் எண்மர் படிவங்கள் தில்லைக்காளி சன்னிதியின் வலப்புறத்தில் அமைந்திருக்கக் காண்கின்றேம். பண்டைய தமிழ் மக்களின் வெற்றி வேட்கைக்கும் வீரத்தியாகத்திற்கும் மிகச் சிறந்த சான்றாக இச்சிற்பம் திகழ்கின்றதெனலாம்.

ஸ்ரீ பிரம்மசாண்டீஸ்வரி தேர் உற்சவத்தின் போது தேர் வீதியுலா சென்ற சமயம் தேர் சக்கரம் பூமியில் புதையுண்டு தேர் நகரமுடியாமல் ஆனதாகவும், சேனைத்தலைவர் என்ற வர்ணத்தினர் சிலர் தேர் நகர்வதற்கு தமது தலையை தாமே வெட்டி பலியிட்டு கொண்டதன் பேரில் தேர் சக்கரம் தானாக மேலேழும்பி நகர்ந்ததாகவும் சொல் வழக்கு ஒன்றும் இருந்து வருகின்றது. இதன் பின்னனியாக இன்றும் சேனைத்தலைவர் சமூகத்தினரது குடும்பத்தில் யாரேனும் காலஞ்சென்றால் அவர்களின் ஆன்ம சாந்திக்காக இத்திருக்கோயிலில் தீர்த்தமும் திருமாலையும் கொடுக்கப்படும் வழக்கம் இருந்து வருகின்றது.

இன்று உலகின் பல பாகங்களிலும் கிளைகள் அமைத்து சமூக சமய அறத் தொண்டுகள் பல புரியும் பெரும் நிறுவனமாகிய "ராமகிருஷ்ண மிஷன்" என்னும் பெயரை உடைய ஸதாபனத்தின் குருதேவரான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைத் தனது அர்ச்சகராக்கி தனது பக்தனாக்கி நேரில் காட்சி கொடுத்து அவருடன் பற்பல தடவைகள் நேரில் உரையாடி பணிப்புரைகள் செய்து பின் அன்னை சாரதாதேவி அருகமர்ந்து உரையாடியும் சுவாமி விவேகானந்தருக்கு காட்சி கொடுத்து அவர் கேட்ட வரமாகிய அளவிலா ஞானம் அருளியும் சைவமே மேலான சமயம் என உலகமறிய "சிக்காகோ" நகரில் அவர் மூலமாக உரைத்துணர புரிய வைத்த தாயார் கருணை தான் என்னே!

பட்டி, விக்கிரமாதித்தன், தென்னாலி இராமன், மகாகவி என்று பெயர் பெற்ற வடமொழிக் கவிஞன் காளிதாஸன் என்போர் தாயாரை நேரில் கண்டு களித்த புண்ணிய சீலர்கள். பாட்டுக்கொரு புலவன் பாரதி எனப் புகழ் கொண்ட பாரதியார் கூட காளி உபாசகர். அவர் பாடிய பாடல்களில் சக்தியை அவர் விதந்து போற்றுவதையும் உன்மத்தராகி பக்தி வெறியுடன் சொற்பிரயோகம் செய்வதையும் காணலாம்.

ஆவரங்கால் சைவர்கள் பூசை செய்த சமயம் ஓர் பூசகர் தாயாருக்கு நிவேதனம் செய்வதாக ஓர் போத்தலில் கள் வாங்கிவந்தார். இரவு வேளை வழிமறித்த காவல்துறையினர் "ஐயா போத்தலில் என்ன கொண்டு செல்கிறீர்கள்? " என வினாவ தான் கள் கொண்டு செல்வதாகக் கூறின் ஐயர் கள் கொண்டு போகிறார். குடிமகன் எனக் கேலி செய்வர் என எண்ணிப் பசும்பால் கொண்டு செல்வதாகக் கூறினார். காவல் துறையினர் போத்தலை எடுத்து சோதனையாகப் பார்த்த போது

அது பசும்பாலாகவே மாறி இருந்ததைக் கண்ட ஐயர் அதிசயமடைந்து இந் நிகழ்வை வடக்கு நவாலியைச் சேர்ந்த திரு. கணேசமூர்த்தியிடம் கூறி ஆனந்தப்பட்டார். திரு.கணேசமூர்த்தி பின்னர் ஐயரைக் கேட்டார் " ஐயா, இதே ஏட்டில் உள்ள பூசை முறைப்படி நடந்தால் அம்மாளை நேரில் காண முடியுமா?" ஐயர் கூறிய பதில் " மகனே! நிச்சயமாக காண முடியும். அதற்கு மிகுந்த திடசித்தம் வேண்டும்" என்பதாகும். இந்த ஐயரின் சகோதரர் இம்முயற்சியில் ஈடுபட்டு இருந்த காலை கிடைத்த அருட் காட்சியில் அவரின் பக்குவமற்ற நிலையால் ஓர் தவறு ஏற்பட்டது. கிடைத்த காட்சியோ ஆவேசம் மிகு நிலை உடையதாய் அமைந்ததால் கண்ட காட்சியைக் கூறியபடி திரியும் உன்மத்த நிலையை அவர் அடைந்து, ஆனைக்கோட்டை வராகி அம்மன் ஆலயச் சூழலில் திரிந்ததாக இதே பத்ததியை உற்சவ காலத்தில் படித்த பாக்கியசாலியான சைவக் குருக்கள் (இரத்தினக் குருக்கள்) 1990 இல் என்னிடம் நேரிடையாகக் கூறக்கேட்டேன்.

1990 இல் 70 வருட இடைவெளியின் பின் கிடைத்த ஏட்டுடன் இரத்தினக் குருக்களைத் தேடி அடைந்து "ஐயா! தம்பனை மாரியம்மன் கோவிலில் இருந்து வருகிறேன். இந்த ஏட்டை ஒழுங்குபடுத்தித் தாருங்கள்" என்று கேட்டேன். ஆலயத்தின் பெயரைக் கேட்டதுமே அவர் கண்கள் கண்ணீர் சொரிந்தன. "தம்பி! அங்கிருந்தா வருகிறீர்கள்? அவ பிரத்தியட்ச தெய்வமப்பா" என மேனி சிலிர்க்கப் பரவச நிலையையடைந்து கூறினார். ஏட்டுச் சுவடியைத் தலைமேல் தாங்கி பல முறை பணிந்து அவர் அடைந்த ஆனந்த நிலையை நேரில் காணும் நிலை எனக்கும் திரு.ஐ.சுப்பிரமணியம் அவர்கட்கும் கிடைத்தது. இரத்தினக் குருக்கள் அவர்களே இனிமேல்நடைபெறஉள்ள கிரியைகட்கு ஏற்ப ஏட்டுச் சுவடியை ஒழுங்குபடுத்த் தந்துதவினார்.

வேள்விப் பூசைக்குப் பலி கொடுக்க முடியாத நிலையில் எட்டாம் மடையின் பின் பலி கொடுப்பதாககச் சில சேவல்களைக் கொணர்ந்த திரு. கணபதிப்பிள்ளை துரைசிங்கம் என்பவர் உற்சவம் நடைபெற்று முடிந்த நிலையில் பலி கொடுப்பதை அம்மன் ஏற்பாளா? என்று சந்தேகப்பட்டார். எந்த நேரத்திலும் இங்கு பலி கொடுக்க முடியும் என்று பூசகர் கூறிச் சென்ற பின்பும் அவர் தனது சந்தேகம் தீராத நிலையில் தீபம் ஏற்றித் தனது நேர்த்தியை நிறைவு செய்தார் அவருடன் கூட நின்ற அவரது தம்பி மகன் செல்வன் கணேசமூர்த்தி பிரசன்னா ஆலய வாசலின் உட்புறமாகத் திரைச்சேலையருகே யாரையோ தேடுவதைக் கண்ணுற்று "தம்பி யாரைத் தேடுகிறாய்"? என வினாவினார் " பெரியப்பா! இங்கே வாசலில் திரை முன்பாக விரித்த கூந்தலுடன் வலது கையில் ஓர் பாத்திரம் ஏந்தி ஓர் அம்மா நின்றா, அவவைத் தேடுகின்றேன்" என மகன் பதில் கூறக்கேட்டு வியப்பும் பயமும் அடைந்த திரு.துரைசிங்கம் அவர்கள் உடனடியாக ஆலயத்தை விட்டு விலகி வீடு நோக்கி ஓடினார். அங்கு காய்ச்சலால் துன்பப்பட்டுப் பின் ஆலய நீறு வாங்கி அணிந்து உடல் நிலை தேறினார். பிரத்தியட்சமாகி அருள்புரியும் அன்னையின் கருணைத் திறத்தை இன்னவாறு என வரையறை செய்து கூற எம்மால் முடியுமா?

# தில்லைக் காளிப் பதிகம்

அல்லல் எல்லாம் தீர்த்து அடிமை கொண்டதாயே
தொல்லை எல்லாம் கடந்தபதம் தந்திடுவாய்நீயே
தில்லையிலே நிருத்தம் செய்யும்
காளிதேவிஅம்மா
எல்லையில்லா கருணையோடு கோயில் கொண்டு
அமர்ந்தவளே சரணம்

சீராரும் பச்சைக் கலாப மயிலே! சிவச்
செம்மலர் மகிழு மயிலே!
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒருசெல்வி
தேமரு பசுங் கிள்ளையே!

காராரும் உருநீல வண்ணக் களஞ்சியக்
கண்ணிற்கு மினிய தங்காய்!
கன்னலே கவின்மேவுமின்னலே என்னுமிடை
காட்டிமுன் நாட்டியத்தைப்

பாராரு மக்களொடு வானாடர் புக்குநனி
பார்த்திட நடித்த பாவாய்!
பண்ணுலவு பைந்தமிழ் உண்ணிலவு மென்மொழிப்
பாவையர்கள் வாழும்பதி

தேராரு வீதியொடு தேனாறு சோலைசூழ்
தெய்வச் சிதம்பர மெனும்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமலர்
தில்லைமா காளி உமையே! 1

மாகயிலை மீதுறையும் அந்நாளிலே எங்கள்
மாதவனை வேண்டி நீயும்
மண்ணலகில் நண்ணிநடம் பண்ணுதற் கோர்வரம்
மகிழ்வொடு பெற்றுவந்தே

மேகநிற மாதுநீ மேவியுல கந்தனில்
மேலான நடனமாட
மிகஅதிர புவனங்கொள் சரமொடுபல் அசுரங்கள்
வீழுநிலை சூழும் அந்நாள்

நாகமணி செஞ்சடையன் ஏகனவன் வந்துடனும்
நடனமது செய்ய நின்றாண்
நடுவிலுற நின்னிடம் நயமழிய அன்றுடன்
நகருவெல்லைக் கப்புறம்

தேகமது வியர்வறத் தேசமது உயர்வுறத்
திருவுயர உருவோடுறைவாய்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 2

பச்சைக் குகந்தஎழில் மரகதத் தொளியுமெண்
பக்கங்களும் சூழ்ந்திட
பழகுகுழல் ஓசையயில் பாலாறு தேனாறு
பைங்குமுத வாயுமாட

இச்சைச் குகந்தசிலை என்னுநுத லாடஉல
கெங்கணும் அதிர்ந்தாடிட
இகல்விழியின் மகரமும் அம்மகரமே பொருளும்
இருமகரமும் ஆடிட

விச்சைக் குகந்தவுயர் வித்தகி நீயாடி
விண்ணொடுமண் ஆட வைத்தாய்
வேதமொடும் ஆகமம் வேண்டிப், பணிந்திடும்
விஞ்ஞான வான மயிலே!

செச்சைக் குகந்தநற் செந்தா மரைகள்மலி
சீகழனி சூழும் பதி
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 3

அள்ளக் குறைந்திடா வள்ளத் தமிழ்தமாம்
அன்னையே நின்னை நாளும்
அண்டிப் பிழைத்திடா தண்டத்துள் வாழ்பவர்
அஞ்சிப் பிழைப்பர் அந்தோ!

கள்ளக் குணத்தினேன் உள்ளத்து மாசுளோன்
காமக் குளத்தில் ஆழ்வேன்
கையைப் பொருத்தியும்உன் காலைப் பிடித்தும்உயர்
கரையேற இது போழ்துமென

உள்ளக் கருத்தினைக் கள்ளிற் சிறந்ததமிழ்
ஒண்கவியி னாலுரைத்தேன்
உத்தமத் தொண்டர்பலர் தத்தமக் குற்றவகை
ஓதிப் பணிந்து பாட

தெள்ளத் தெளிந்த அமிழ்தென்னத் தகுந்ததமிழ்
தித்திக்கும் முத்திப் பதி
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 4

கிளையாடு நின்திருக் கேசபா ரத்தினொடு
கிளர்சேவ லங்களாட
கிழித்தெழு சுடர்பரிதி என்னுமணி நூபுரம்
கிண்கிணென ஆடநின்கை

வளையாட இருகுங்கு மக்குன் றெனச்சொல் முலை
வரைகளவை ஆட ஆட
வன்மையுற நீயாடி வள்ளலார் உடன் ஆடி
வானொடுமண் உலகம் ஆட

விளையாடு நங்கையே! விண்ணாடு வித்தகீ
விளையாடி யொழிய அருளாய்,
வீறிட்டழுமுயிர்கள் தேறிட்டெழுந்துயர
வேண்டிக் கனிந்தருளுவாய்:

ளையாத தெள்ளமுது வரையாது தநதெனது
ஜென்மசாபல்யம் அருள்வாய்
தில்லைத்தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 5

வெங்கொடும் அரக்கர்தமை வெட்டிக் குடித்தவர்தம்
வீரப்பெருங் குருதியை
வீரிட்டெழுந்துலகு கூரிட்டலர்ந்தழிய
வெய்யநடம் ஆடி நீ முன்

எங்கணுமே மக்கட்கு மூறம் இரிந் தோட அவர்
"என்றனக் கேற்ற ஊண்" என்(று)
இச்சை வைத்தாய் அவர்தம் பச்சையூன் தன்னிலே
எங்கள்வேற் காளியம்மே!

அங்கவர் தமைக்கூடி ஆதரவு தந்துலகும்
அழியாத வண்ணம் அரனார்
ஆர்த்தமர் காணநல ஊர்த்துவ நடம் ஆடி
அம்மைநின் வெம்மை தீர்த்தார்:

திங்களுறு நல்வதன மங்கையர்கள் எங்குமலி
தெய்வத் திருப்பதி யதாம்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 6

போருலவு சூலத் துடன்நீ புரிந்திடும்
புன்புலால் நாறு நடனம்
பூவுலகில் அந்நாளி லேஉதிர வெள்ளமது
போக்கிடச் செய்த அதுபோல்

பாரதனில் இன்றுநீ பாய்ந்துநடம் ஒன்றுமே
பண்ணாதிருந் தருளுவாய்!
பட்டணமும் சிற்றூரும் பாலரொடு மாதராம்:
பல்கோடி நல்லுயிர்களும்:

கோரமுடன் மாண்டுதீக் கிரையாகி ரத்தக்
குழம்பிலே சாந்து சாம்பர்
குவியலாய் கூடியிப் புவியெல்லாம் நைந்திடும்
கொலைபோதும் போதும் இனியே!

சீருடன் எதிர்கால ஜெகமெல்லாம் வாழநனி
செய்க அருள் தெய்வமணியே
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 7

அகிலாண்ட கோடிகள் அவைமீ திலங்கிடும்
அளவில்ச ராசரங்கள்
அத்தனையும் உன்வயி றுயிர்த்துநனு யேவளர்த்
தன்புடன் ஆதரிப்பாய்!

முகிலார்ந்த திருமேனி ஜகதாம்பி கே! பெரும்
மூலப் பரம் பொருட்கும்,
முதலான சக்தியே! முடிவான முத்தியை
மூர்க்கனோந் கருள்செய் குவாய்!

சகியாத துன்பமுறு சாகாத் தன்னிலினி
சலியாதி திருக்க இயலேன்;
சனியாதி கோள்களும் இனியாகிலும் நவை
தமைநீங்கி உதவ அருள்வாய்!

திகிலால் இவ்வையகம் திரியாத வண்ணம் நீ
திருவார்ந்த அருள் செய்குவாய்!
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 8

பொன்மேரு வில்லியை எதிர்ப்பட்ட ஞான்றிலுன்
பொம்மன்முலை மூன்றி லொன்று
புருடோத்த மன்சிவன் புதுநோக்கு சார்ந்திடப்
புணர் இன்பம் உற்றொடுங்க

நின்மேனி தன்னிலொரு நிறைநாண மதுமேவி
நீங்கிய பின் மற்றொரு முறை
நீநாண மதை மிகவுளோநாணி லத்திலுற
நிர்ப்பந்த முற்ற சமயம்

தன்மேனி கொண்டெழில் தழல்மேனி நடராசர்
தமதுகாற் கொண்டூர்த்துவக்
தாண்டவம் அதுசெய்தும் ஈண்டுனை அமர்வித்த
சந்தர்ப்பம் என்றறிவர் காண்

தென்மேரு என்னுமோர் பொன்மேவும் அம்பலம்
திகழும் புகழ்ப்பதி யதாம்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 9

சாற்றிடும் பல்சமய நச்சர வெனும் தீய
சச்சரவு தன்னிலும் உன்
சார்ந்திட்ட ஒவ்வாத சாத்திரப் படுகுழியில்
தாழும் சழக்கர் இடையும்.

கூற்றினை நிகர்வெய்ய கோத்திரம் சாதிகுலம்
கொண்டாடு கூட்டத்திலும்
கூடாதி யானிந்த நாடானதும் ஓங்க
கொள்கை மிகவே கொண்டாடுமே

மாற்றிஇது போதுள்ள மனிதச் சமூகமே
மாண்புடைய தாக ஓங்கி
மாசற்ற சமதர்ம தேசுற்ற வழிவாழ
மனமார்ந்த தொண்டு செய்வான்

தேற்றியருள் செய்திட்ட ஊற்றினருள் பெய்திட்ட
தேசுமலி ஈஸ் வரியே!
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 10

என்னநல புண்ணியம் யானங் கியற்றினேன்
இவ்வாழ்வில் ஈண்டுற்றியான்
இன்னலவை நீங்கினற் கன்னலெனு நற்சுவை
ஏய்ந்திடும் தீந்தமி ழினால்

சொன்னல முடன்நினது தோத்திரம் பாடி நான்
சொன்னநலம் எல்லாம் பெற
தூயமா காளியே நேயமார் ஆழியே!
தொல்லுலகு போற்றும் அன்னாய்!

பன்னநலம் ஆர்த்திடும் பாமாலை பாடிடும்
பாலசுப் பிரமணியம் ஆம்
பாலன் எனக்குனருள் பாலித்து மிக்கபொருள்
பரிவோ டிரங்கி அருளாய்!

தென்னையொடு கமுகுமா தீங்கரும் பென்னுமிவை
செங்கழனி யோடு சூழும்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே! 11

# ராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரியிலிருந்து

★ *தெய்வ சன்நிதியில் ஆடு பலியிடுவது முறையா!*

பலியிடுவதை சாஸ்திரம் ஆமோதிக்கிறது. அஷ்டமி திதி போன்ற நாட்களில் அம்பிகையின் சன்நிதியில் ஆடு பலியிடுவதற்குச் சாஸ்திரப் பிரமாணம் இருக்கிறது. ஆனால் பலியிடுவதைப் பார்ப்பதிலோ, நைவேத்தியமாகப் படைத்த மாமிசத்தைப் பிரசாதமாக ஏற்கவோ என்னால் இயலுவதில்லை. அம்பிகைக்கு நான் சினமூட்டலாகாது என்று கருதி அத்தகைய பிரசாதத்திற்கு கைகூப்பி வணக்கம் செய்து விடுகிறேன்.

★ ஆதிசக்தியே அனைத்திற்கும் மூலகாரணம். வித்தியாசக்தி அவித்தியா சக்தி என அவளிடத்து இரண்டு அம்சங்கள் உண்டு. அவித்தியாசக்தி மயக்கத்தை உண்டு பண்ணுகிறது. ஆசாபாசத்தையும் அது உண்டு பண்ணுகிறது. வித்தியா சக்தியோ பக்தி, இரக்கம், விவேகம், முதலியவைகளை நல்குகிறது. இத்தகைய நல்லியல்புகள் சாதகனை ஈசன் சன்நிதிக்கு அழைத்துச் செல்லுகின்றன. அவித்தியா சக்தியை ஆராதித்து அவள் நம்மை அணுகாவண்ணம் வேண்டிக் கொள்ளுதல் அவசியம்

★ அன்னை பராசக்தி கொலைச்செயலிலேயே சதா ஈடுபட்டு இருப்பதாக தேவி மகாத்மியம் கூறுகிறதே. இதன் உட்கருத்து யாதோ?

இது மக்களாகிய நமக்கு விளங்காத விஷயமே . பிரக்ருதித் தாயின் செயல்களெல்லாம் இறுதியில் சம்ஹார செயலாக முடிகிறது.ஒழிவில் ஒடுக்கம் என்னும் கோட்பாட்டில் இது முடிகிறது.

# மெய்யடியார்களே!

தில்லைக்காளி அம்மன் கும்பாபிஷேக மலரில் காலத்தால் மூத்த எங்கள் குலதெய்வமாக விளங்கும் களையோடை கண்ணகை அம்மன் பற்றிய சில தரவுகள் எதிர்காலச் சந்ததி அறியும் வண்ணம் வெளிவரவேண்டும் என்ற ஆவலால் இத்தொகுப்பு இடம்பெறுகின்றது.

*சி.ஸ்ரீதரன்*

அடியார்களே! தெய்வ அம்சம் பொருந்திய கண்ணகை, காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த சமயம் தாயாரது காற்சிலம்பில் பதிக்கப்படவேண்டிய நாகமணி முதல் அதி உயர்வான பரல்கள் வரை அனைத்தும் இலங்கையின் வடபகுதியை ஆண்ட விஷ்ணு புத்திர வெடி அரசன் வசம் இருந்தன. அவற்றை மன்னன் விற்பனைக்கு மறுத்த காரணத்தாலும் கண்ணகையின் தெய்வத்தன்மையை உணராது மறுத்ததாலும் சோழ மன்னன் தூண்டுதலால் மிகாமன் என்பவன் சிங்கள மன்னன் உதவியுடன் வலிமையான கடற்படை அமைத்து வெடி அரசன் மன்னனுடன் சமர் புரிந்து சமரில் ஆற்றாது கண்ணகையை வந்தனை செய்து பின் கபடமான முறையில் கைது செய்து பணயக்கைதியாக்கினான். இதை அறிந்து எதிர்த்து வந்த வெடி அரசன் தம்பி வீரநாராயணன் வீரமரணம் அடைந்தான். அதன் பின் மற்றைய தம்பியர் விளங்கதேவன், ஏரிளங்குருவன் இருவரும் சேனையுடன் வந்து எதிர்சமர் புரிந்தனர். படையினர் மான வலிகுன்றிய மிகாமன் தனிப்போர் புரிய அறை கூவி ஏரிளங்குருவனுடன் பொருதி பின்வாங்கினான். வெடியரசனை மனக்கிலேசம் அடைய வைத்து அவன் மூலமாக யுத்த நிறுத்தம் செய்யவைத்தான். அண்ணன்

சொல் மீறாத ஏரிளங்குருவன் சினம் பொறாது தன் உடைவாளைக் குற்றி முறித்து என் அண்ணன் வீரநாராயணனை கொன்று என்மக்களை நாசப்படுத்திய நீ தகாத வழியில் உயிர் காவ வழி சமைத்தாய், நாகமணியைப் பெற்றுச் செல் என்று கூறி தனது காலின் கீழாக மணியை எறிந்தும் சினம் தணியாதவனாய் இந்த மணியை பொருள் கொண்டோ வீரம் கொண்டொ நீ பெறவில்லை. எனவே இம்மணியை யாருக்காகப் பெற்றாயோ அவளால் இம்மணி உள்ள நகர் எரியும் அவள் கணவனும் கபடத்தனமான முறையில் உயிர் துறப்பான் எனச் சாபமிட்டான் (ஆதாரம்: வெடி அரசன் வரலாறு)

